கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி 2013)

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

# ECO 3101 Monetary Economics

நேரம் : 02 மணித்தியாலங்கள்

முதலாம் வினாவையும் ஏனைய வினாக்களில் இரண்டையும் தெரிவுசெய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

---

01.(அ) பணம் என்றால் என்ன என்பதனை வரையறுத்துக் கூறுக. அதன் தொழிற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) பணத்தின் வகைகளைக் குறிப்பிட்டுக் கூறுக.

(05 புள்ளிகள்)

(இ) பணப்பதிலீடுகள் பற்றி சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஈ) பணத்துக்கான கேள்வி பற்றிய கெயின்சிய விளக்கத்தை சுருக்கமாகக் கூறி அவற்றில் உத்தேச நோக்கக் கேள்வி பற்றி வரைபடத்துடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(உ) பணத்துக்கான கேள்வி பற்றிய ரொபினின் (Tobin) நவீன ஆய்வு பற்றி கருத்துரைக்க.

(12 புள்ளிகள்)

02.(அ) கேள்வித்தூண்டல் மற்றும் செலவுத்தூண்டல் பணவீக்கம் என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) பிலிப்ஸ் வளையியை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) பணவீக்கம் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தும் பாதிப்புக்களை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

03.(அ) ஒரு மத்திய வங்கியின் குறிக்கோள்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) மத்தியவங்கியினால் மேற்கொள்ளப்படும் கடன்கட்டுப்பாட்டு கருவிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) இலங்கைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய வங்கியினால் வழங்கப்படும் பல்வேறுபட்ட சேவைகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

04.(அ) வணிக வங்கிகள் ஆற்றும் முதன்மைப் பணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) வணிக வங்கிகள் பணியாற்றும்போது எதிர்கொள்ளும் இடர்களை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(இ) கொடுகடன் அட்டைப்பாவனையால் ஏற்படும் நன்மை, தீமைகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

05. (அ) வேறுபட்ட நாணயமாற்று வீத முறைகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் அண்மைக்காலமாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் நாணயமாற்று வீத முறையினை விளக்குக.

(12 புள்ளிகள்)

(இ) நாணயப்பெறுமதி இறக்கம் சென்மதி நிலுவைப் பிரச்சனைக்கு தீர்வாக அமையுமா? ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

***